LIBRARY
25 FEB 200
Eastern University, S

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## PART I EXAMINATION IN BBA/ COM (REPEAT) 2001
## BBA/ COM 201 MACRO ECONOMICS

Calculators allowed — Time : 03 hours

ஏதாவது **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

01. பழம் பொருளியலாளர்களின் வெளியீடு மற்றும் வேலைவாய்ப்புக் கோட்பாட்டினை விளக்கி விமர்சிக்க.

(20 புள்ளிகள்)

02. அ. சமநிலைத் தேசிய வருமானம் என்றால் என்ன? மூடப்பட்ட ஒரு பொருளாதாரத்தில் அதற்கான நிபந்தனைகளைத் தருக.

(08 புள்ளிகள்)

ஆ. ஒரு பொருளாதாரத்தின் நுகர்வுத் தொழிற்பாடு வருமாறு:

$$C = 40 + 4/5\, Y$$

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இப் பொருளாதாரத்தில் ரூபா. 30 மில்லியன் என்ற அளவுக்கு முதலீடு இடம் பெறும் போது சமநிலை தேசிய வருமான வட்டம் யாது?

(04 புள்ளிகள்)

ii. அரசாங்கக் கொள்வனவுகள் அங்கு ரூபா. 20 மில்லியன் என்றளவு இடம் பெறுகின்றது. புதிய சமநிலை தேசிய வருமான மட்டம் எவ்வளவு?

(04 புள்ளிகள்)

iii. இப் பொருளாதாரத்தின் நிறை தொழில் மட்ட வருமானம் ரூபா. 500 மில்லியன் ஆகும். இதனை இப் பொருளாதாரம் எவ்வாறு அடையலாம்?

(04 புள்ளிகள்)

03. கெயின்சுக்குப் பின்னர் தோன்றிய நுகர்வுத் தொழிற்பாடு பற்றிய கோட்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

(20 புள்ளிகள்)

04. அ. முதலீடு என்பதனை பொருளியலில் எவ்வாறு வரையறுக்கலாம்?

(08 புள்ளிகள்)

ஆ. வட்டி வீதம், முதலின் எல்லைத் திறன் என்பவை எவ்வாறு முதலீட்டுத் தீர்மானத்தில் பங்கெடுக்கின்றன?

(12 புள்ளிகள்)

05. அ. கேள்வித் தூண்டல், செலவுத் தூண்டல் பணவீக்கங்களை வேறுபடுத்திக் காட்டுக.

(12 புள்ளிகள்)

ஆ. இவ்வாறு வேறுபடுத்தி நோக்குவது நடைமுறையில் பொருத்தமானதா?

(08 புள்ளிகள்)

06. அ. ஒரு நாட்டின் சென்மதி நிலுவையில் சமநிலையின்மை ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களைத் தருக.

(12 புள்ளிகள்)

ஆ. நிலையான நாணய மாற்று விகித முறையினைப் பேணிவரும் ஒரு நாடு, நாணய மதிப்பிறக்கம் செய்வது அதன் தொடர்ந்தேர்ச்சியான சென்மதி நிலுவைப் பிரச்சினையை தீர்ப்பதில் எந்தளவிற்கு தாக்கமுள்ளதாக அமையும்?

(08 புள்ளிகள்)

07. வர்த்தக சகடவோட்டத்தின் பிரதான கட்டங்களை (Phases) வரைபட உதவியுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

08. சுருக்கமாக விளக்குக.

அ. பணத்திற்கான உத்தேச நோக்க கேள்வி

ஆ. IS – LM வளையிகள்

இ. முகாமை செய்யப்பட்ட நாணய மாற்று விகிதம்

(20 புள்ளிகள்)